**இராசிபுரம் நகராட்சி தனி அலுவலர் அவர்களால் 30.04.2020–ஆம் தேதி முற்பகல் 11.00 மணிக்கு சாதாரணக் கூட்டத்தில் நடைபெற உள்ள கூட்ட நடவடிக்கைகள்.**

இராசிபுரம் நகராட்சி, தனி அலுவலர்,
நாள் : **29.04.2020** இராசிபுரம் நகராட்சி

(1) இராசிபுரம் நகராட்சிப் பகுதிகளில் கொரோனா வைரஸ் (கோவிட்–19) நோய் நகர பொது மக்களுக்கு பரவாமல் தடுக்க, தூய்மை பணியாளர்களுக்கு 3 layer முககவசம் (Mask), முழு உடல் பாதுகாப்பு கவசம் (PPE Kit), கையுறை (Gloves) ஆகியப் பொருட்கள் வாங்க கடந்த 22.04.2020 அன்று மூன்று விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. அவற்றின் விவரம் பின்வருமாறு.

| **வ. எண்.** | **நிறுவனத்தின் பெயர்** | **ஒன்றின் விலை (ரூபாயில்)** | | |
|---|---|---|---|---|
| | | **Mask** | **PPE Kit** | **Gloves** |
| 1 | Reliant Global Green energy & Co., Coimbatore-12 | 15.22 | 454.65 | 918.40 |
| 2 | Shine Traders, Coimbatore - 6 | 15.75 | 458.85 | 929.00 |
| 3 | Radiant Textile Process, Chithode | 16.27 | 462.00 | 929.04 |

வ.எண். 1–இல் குறிப்பிட்டுள்ள ஒப்பந்ததாரர் குறைவான விலைப்புள்ளி வழங்கியுள்ளதால், அதன் ஒப்பந்ததாரர் M/s. Reliant Global Green energy & Co., Coimbatore-12 என்ற நிறுவனத்தினரின் விலைப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட செலவினங்களை SDRF நிதியிலிருந்து Section 15–இல் வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(868/20/எச்1)

**தீர்மானம் எண். 799**

அனுமதிக்கப்பட்டது.

(2) இராசிபுரம் நகராட்சியில் கச்சேரி தெருவில் செயல்படும் அம்மா உணவகத்தில் பராமரிப்பு பணிகள் மற்றும் குடிநீர் வசதி, சமையல் உபகரணங்களை பழுது நீக்கம் மற்றும் பராமரிப்பு மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ. 3.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

(961/20/இ2)

**தீர்மானம் எண். 800**

அனுமதிக்கப்பட்டது.

(3) இராசிபுரம் நகராட்சியில் கொரோனா வைரஸ் 19 தடுப்பு நடவடிக்கைக்காக நகராட்சி அலுவலகத்தின் முன் பகுதியில் பொது மக்கள் மற்றும் அலுவலகப் பணியாளர்கள் கை கழுவ

இரண்டு வாஸ்பேசின் வைத்து தண்ணீர் வசதி செய்யும் பணி மேற்கொள்ள விலைப்புள்ளி கோரப்பட்டதில், கீழ்க்கண்டவாறு மூன்று விலைப்புள்ளிகள் பெறப்பட்டது.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி | விலைப்புள்ளித் தொகை |
|---|---|---|
| 1) | திரு ஆர். மாணிக்கம், இராசிபுரம் | ரூ. 16920/– |
| 2) | திரு என். செல்லப்பன், இராசிபுரம் | ரூ. 16290/– |
| 3) | திரு ஆர். பிரகாசம், இராசிபுரம் | ரூ. 16748/– |

பெறப்பட்ட 3 விலைப்புள்ளிகளில் திரு என். செல்லப்பன், ஒப்பந்ததாரரின் குறைந்த விலைப்புள்ளி ஏற்கப்பட்டு 1920–ஆம் வருடத்திய நகராட்சி சட்ட 15–இன்கீழ் பணிகள் அவசர அவசியம் கருதி செய்து முடிக்கப்பட்டது மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் பதிவு செய்யலாம்.

(927/20/இ2)

**தீர்மானம் எண். 801**

அனுமதிக்கப்பட்டது.

(4) இராசிபுரம் நகராட்சி வார்டு எண். 1 முதல் 27 வரையுள்ள பகுதிகளில் தினசரி சுகாதார பிரிவு மூலம் மருந்து அடிப்பதற்கு தண்ணீர் பிடிக்க சின்டெக்ஸ் டேங்க் வாங்கி கொரோனா தடுப்பு நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தும் பணி மேற்கொள்ள விலைப்புள்ளி கோரப்பட்டதில், கீழ்க்கண்டவாறு மூன்று விலைப்புள்ளிகள் பெறப்பட்டது.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி | விலைப்புள்ளித் தொகை |
|---|---|---|
| 1) | திரு ஆர். பிரகாசம், இராசிபுரம் | ரூ. 59450/– |
| 2) | திரு ஆர். மாணிக்கம், இராசிபுரம் | ரூ. 58800/– |
| 3) | திரு என். செல்லப்பன், இராசிபுரம் | ரூ. 58330/– |

பெறப்பட்ட 3 விலைப்புள்ளிகளில் திரு என். செல்லப்பன், ஒப்பந்ததாரரின் குறைந்த விலைப்புள்ளி ஏற்கப்பட்டு 1920–ஆம் வருடத்திய நகராட்சி சட்ட 15–இன்கீழ் பணிகள் அவசர அவசியம் கருதி செய்து முடிக்கப்பட்டது மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் பதிவு செய்யலாம்.

(926/20/இ2)

**தீர்மானம் எண். 802**

அனுமதிக்கப்பட்டது.

ஒம் /– ஆ. குணசீலன்,
தனி அலுவலர்.

/ உண்மை நகல் /

ஆணையாளர்,
இராசிபுரம் நகராட்சி.